**PRESS RELEASE**

**TANGEDCO Dumps Toxic Sea Sand in Kosasthalai River; Ignores NGT Ban**

**3 August, 2021. Chennai** -- Ignoring a National Green Tribunal (NGT) order banning the use of dredged sea sand to reclaim waterbodies, TANGEDCO has blocked the Kosasthalai River's backwaters using dredged sea sand with dangerous levels of arsenic, cadmium, copper and chromium. Sand samples collected from the reclaimed portion of the river contained 14.96 mg/kg of Arsenic, more than two times the Interim Sediment Quality Guideline (ISQG) for aquatic sediment of 7.24 mg/kg, 15.23 mg/kg of cadmium, more than 20 times ISQG, 23.54 mg/kg of copper which is 1.25 times ISQG and 106.1 mg/kg of chromium, which is more than twice safe levels in aquatic sediments. The ISQGs are safe threshold levels of chemicals for protection of aquatic life, and represent levels above which toxic effects on aquatic life may occur. The samples were taken on 14 July, 2021 and were analysed at the US Environmental Protection Agency-approved Chester LabNet.

A January 2020 report submitted to the NGT by a joint committee of Central Pollution Control Board and Tamil Nadu Pollution Control Board found that sea sand dredged and dumped in the Ennore Creek by Kamarajar Port contained very high concentrations of magnesium, aluminum, potassium, chromium, lead and calcium, and high concentrations of other toxic metals like copper, nickel and zinc. The levels of these metals found in the samples taken from TANGEDCO's dumpsite inside the river are far higher than even the very high concentrations reported by the joint committee.

Movement of sand is a strictly regulated activity. However, given the prevalent lawlessness in the Ennore-Kattupalli area, sea sand is routinely transported from the ports to various places without license from the revenue authorities. This matter has been brought to the notice of the revenue authorities.

On 19 July, 2021, fishers from Kattukuppam occupied the site of the illegal encroachment in Kosasthalai River by the coal conveyor corridor for TANGEDCO's Ennore SEZ project. A 3-member citizen panel has written on this matter to the Chief Minister and Chief Justice of Madras High Court echoing the demands of the fishers. They have called for an immediate halt to any further dumping, and recommended removal of dumped sand and restoration of the wetlands.

"Fish is an inexpensive source of protein for the poor. Dumping contaminated sand in this section of the river is like poisoning their food. This is the place where we catch the fish that we sell in the market", said R.L. Srinivasan, a fisherman from Kattukuppam.

Contamination of river due to industrial pollution, coal ash leakage and dumping of toxic material such as contaminated sand dredged from the harbour basin has degraded the river water quality and harmed fish population. Health of Ennore fishers is severely impacted due to contamination of river and fish. Exposure to contaminated water while fishing has chronic skin diseases among fishers. Consumption of contaminated seafood may also lead to health impacts. With a public health infrastructure that is not sensitive to the special needs of this pollution-impacted community, health issues due to industrial pollution go untreated.

Fisherfolk have demanded that all further encroachment of the river bed should be stopped, and the river should be restored to good health.

**For more information, contact:**
Pooja Kumar (Save Ennore Creek Campaign): 9791122180
R.L. Srinivasan (Kattukuppam fisherman): 99627 33450

Blog: storyofennore.wordpress.com/home

**ஊடக செய்தி**

**TANGEDCO கொற்றலையாற்றில் கொட்டிய கடல் மண் விஷமானது: ஆய்வு கண்டுபிடிப்பு**

**3 ஆகஸ்ட் 2021. சென்னை**

தோண்டப்பட்ட கடல் மண்ணைக்கொண்டு நீர்நிலைகளை மூடக்கூடாது என்று தேசிய பசுமை தீர்ப்பாயம் (National Green Tribunal-NGT) உத்தரவிட்டிருந்த போதும், அதனை மீறி, கொற்றலையாற்றின் கழிவெளியில், ஆர்சனிக், கேட்மியம், தாமிரம், குரோமியம் ஆகிய நச்சு உலோகங்களை அபாயகரமான அளவுக்குக்கொண்டுள்ள கடல் மண்ணைக்கொட்டி ஆற்றின் போக்கை TANGEDCO தடுத்துள்ளது. கடல் மண்ணை கொட்டி 'மீட்கப்பட்ட' இடங்களின் மண்ணை மாதிரி எடுத்து சோதனை செய்தபோது, 14.96 mg/kg ஆர்சனிக்கும், 15.23 mg/kg காட்மியமும், 23.54 mg/kg தாமிரமும், 106.1 mg/kg குரோமியமும் இருந்தது கண்டறியப்பட்டது. அர்செனிக்கின் அளவு  நீர்நிலை சகதிகளுக்கான இடைக்கால சகதி தர வழிகாட்டுதலை (Sediment Quality Guideline -ISQG) விட இரண்டு மடங்கு அதிகமானதாகும், காட்மியத்தின் அளவு 20 மடங்கு அதிகமானதாகும், தாமிரத்தின் அளவு 1.25 மடங்கு அதிகமானதாகும், குரோமியத்தின் அளவு 2 மடங்கு அதிகமானதாகும் உள்ளன.

ISQG என்பது நீர் வாழ் உயிர்கள் எந்த அளவுக்கு நச்சு வேதிப்பொருட்களை தாங்கி பாதுகாப்பாக இருக்கும் என்பதற்கான குறைந்த பட்ச அளவாகும். அந்த அளவைத் தாண்டும்போது, நீர் வாழ் உயிரின் மீது நச்சுப் பொருளின் தாக்கம் விளைவுகளை ஏற்படுத்தத் துவங்கும். மாதிரிகள் 2021 ஜூலை 14 அன்று சேகரிக்கப்பட்டு, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமையின் (US Environmental Protection Agency) அங்கீகாரம் பெற்ற Chester LabNet சோதிக்கப்பட்டன.

மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் கூட்டு கமிட்டி, 2020 ஜனவரியில் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், காமராஜர் துறைமுகம் கடலைத் தோண்டி எண்ணூர் கழிவெளியில் கொட்டிய கடல் மண்ணில் மேக்னீசியம், அலுமினியம், பொட்டாசியம், குரோமியம், ஈயம், கால்சியம் ஆகியவற்றின் அளவு ''மிக அதிக அளவு அடர்த்தியில்'' இருந்ததாகவும், பிற நச்சு உலோகங்களாகிய காப்பர், நிக்கல், துத்தநாகம் ஆகியவை ''அதிக அளவு அடர்த்தியில்'' இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. TANGEDCO ஆற்றில் கொட்டிய கடல் மண்ணில், கூட்டு கமிட்டி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த ''மிக அதிக அளவு அடர்த்தியில்'' என்பதைவிடவும் கூடுதல் அளவுக்கான நச்சுகள் இருந்தன.

மணலின் இடம் விட்டு இடம் கொண்டுசெல்வது மிகவும் கறாரான கட்டுப்பாட்டுக்குள், கண்காணிப்புக்குள் உள்ள நடவடிக்கையாகும். இருந்தபோதும், தற்போது எண்ணூர் - காட்டுப்பள்ளி பகுதியில் நிலவும் 'சட்டத்துக்கு அப்பாற்பட்ட ஆட்சியில்', துறைமுகங்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கு வருவாய் துறையிடமிருந்து உரிமம் பெறாமல் மணல் எடுத்துச்செல்லப்படுகிறது. இவ்விஷயம் குறித்து வருவாய்த்துறை அதிகாரிகளுக்குத் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

19 ஜூலை 2021 அன்று காட்டுக்குப்பம் மீனவர்கள் TANGEDCO வின் எண்ணூர் SEZ திட்டத்திற்காக கொற்றலையாற்றில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியைக் கைப்பற்றிக்கொண்டனர். மீனவர்களின் கோரிக்கைகள் குறித்து முதலமைச்சருக்கும், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கும் மூன்று பேர் கொண்ட குடிமக்கள் குழு கடிதம் எழுதியது. இதற்கு மேலும் மணலைக்கொட்டக் கூடாது என்று கோரிய குடிமக்கள் குழு, கொட்டப்பட்ட மண் அள்ளப்பட வேண்டும் என்றும், சதுப்புநிலம் அதன் பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்று கோரியது.

`ஏழைகளுக்கு கிடைக்கக் கூடிய மலிவான புரோட்டின் சத்துணவு மீனாகும். நதியின் இந்தப் பகுதியில் மாசுபட்ட மணலைக்கொட்டுவது ஏழைகளின் உணவில் நஞ்சைக்கொட்டுவதாகும். நாங்கள் இங்குதான்

மீன் பிடிக்கிறோம். அதனை மீன் சந்தையில் விற்கிறோம்" என்று காட்டுக்குப்பம் மீனவர் R.L. ஶ்ரீனிவாசன் சொன்னார்.

நதியில் கொட்டப்படும் ஆலை கழிவுகளாலும், சாம்பல் சகதி கசிவினாலும், துறைமுக பகுதிகளின் மாசுபட்ட மண்ணை கொட்டி நிரப்புவதாலும் ஆற்று நீரின் தரம் கெட்டுவிட்டது. ஆற்று மீன்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. TANGEDCO குழாய் பாலத்தின் அருகே கிடைத்துவந்த வெள்ளை இறா என்று அறியப்பட்ட இனம் தற்போது, நிலக்கரி சாம்பலின் மத்தியில் வாழ்வதால் நிறம் மாறி "சாம்பல் இறா" ஆகிவிட்டது என்றும், அது உடல் நசிந்து காணப்படுகிறது என்றும் மீனவர்கள் சொல்கிறார்கள்.

ஆறு மற்றும் மீன் மாசுபட்டதால் எண்ணூர் மீனவர்களின் ஆரோக்கியம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நீண்ட நேரத்திற்கு அசுத்தமான நீரில் நின்று மீன் பிடிப்பதால், இந்த பகுதி மீனவர்கள் பல்வேறு தோல் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். அசுத்தமான கடல் உணவை உட்கொள்வது உடல்நல பாதிப்புகளுக்கும் வழிவகுக்கும். இந்த மாசுபாட்டால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் சிறப்புத் தேவைகளுக்கு உணர்திறன் இல்லாத ஒரு பொது சுகாதார உள்கட்டமைப்புடன், தொழில்துறை மாசுபாட்டால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள் சிகிச்சை அளிக்கப்படாமல் போகின்றன.

ஆற்றுப் படுகை மேலும் ஆக்கிரமிப்பதை நிறுத்த வேண்டும் என்றும், நதியின் ஆரோக்கியத்தை மீட்டெடுக்க வேண்டும் என்றும் மீனவர்கள் கோருகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு :**
பூஜா குமார், எண்ணூர் கழிவெளி பாதுகாப்பு பிரச்சாரம்: 9791122180
R. L. ஶ்ரீனிவாசன், மீனவர், காட்டுக்குப்பம்: 99627 33450
Blog: storyofennore.wordpress.com/home

**Table Comparing Concentration of Metals in Dredged Material Samples taken by NGT Appointed Joint Committee of IIT-CPCB-TNPCB**
**Vs.**
**Independent Sampling by Save Ennore Creek Campaign**

| **Parameter**<br><br>**Unit: mg/kg (µg/g)** | **Highest concentration metals in soil samples collected from 10 dumpsites of Kamarajar Port**<br><br>**(IIT-CPCB-TNPCB Joint committee)**<br><br>**Unit: mg/kg (µg/g)** | **Concentration of metals in soil sample collected from TANGEDCO's dumpsite**<br><br>**(Save Ennore Creek Campaign)**<br><br>**Unit: mg/kg (µg/g)** | **Canadian Interim Sediment Quality Guideline for protection of (marine) aquatic life**<br><br>**Unit: mg/kg (µg/g)** |
|---|---|---|---|
| As | 6.3 | **14.96** | 7.24 |
| Al | 11,130.4 | **35,760** | |
| Cd | - | **15.23** | 0.7 |
| Co | - | 15.51 | |
| Cr | 32.1 | **106.1** | 52.3 |
| Cu | 11.8 | **23.54** | 18.7 |
| Fe | 7821.7 | **24,850** | |
| K | 3,537.5 | **14,790** | |
| Mg | **7,352.3** | 4,199 | |
| Ni | 13.2 | **39.33** | |
| Pb | 12.7 | **14.12** | |
| Zn | 35.8 | **57.33** | |